பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: புரட்டாசி 14 (30—9—72) சனி — வெளியூர்: புரட்டாசி 15 (1—10—72) ஞாயிறு [இதழ்: 90

## இளைஞர்கட்குத் தொழிற்பயிற்சி நிலையம்

### மத்திய அரசு உதவியுடன் துவக்க வாய்ப்பு

வேலூர், செப். 30— பள்ளிப் படிப்பை முடித்து வெளியேறும் இளைஞர்கள் பல வேறு தொழில்களிலும் திறமை பெற்று தங்களுக்குத் தாங்களே வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொள்ளும் வகையில் பயிற்சி யளிக்கும் பயிற்சி நிலையம் ஒன்

(4-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்நாட்டில் மழை--வெள்ளம்

## 5 ஏரிகள் உடைப்பு--நொய்யல் வெள்ளத்தில் பல வீடுகள் அடித்துச்செல்லப்பட்டன

### 40 பேர் மாண்டதாகத் தகவல்--நிலைமையை நேரில் அறியஅமைச்சர் கண்ணப்பன்விரைந்தார்

சென்னை, செப். 30—

வங்காள குடாக் கடலின் தென் மேற்குப் பகுதியில் கடந்த வியாழனன்று உருவான புயல் சின்னம் மேற்கில் நகர்ந்ததன் விளைவாகத தமிழ்நாட்டின் உட்பகுதிகளில் பெரு மழை பெய்யத் தொடங்கியிருக்கிறது; இந்தப் புயல் மேலும் நகரக்கூடும்; அடுதத சில மணி நேரங்களில் ஆங்காங்கு பெருமழை பெய்யக்கூடும்.

கடும் மழையின் காரணமாகக் கோவை மாவட்டத்திலுள்ள திருப்பூர் நகரில, நொய்யல்--ஜம்பை ஆறுகளின் வெள்ளம் புகுந்தது; இதில் 31 பேர் மாண்டனர் என்று அஞ்சபபடுகிறது; ஆனால் 40 பேருக்கு மேல் இறந்ததாக உறுதி செய்யபபடாத தகவலகள் கூறுகின்றன; 5 பெரிய ஏரிகளில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.

வெள்ளத்தின் விளைவுகளை நேரில் கண்டறிய, அறநிலையப் பாதுகாபபுத் துறை அமைசசர் மு. கண்ணப்பன் விரைந்துளளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 5,000 வழங்கப்பட்டிருக்கிறது.

திருப்பூர் நகரம் பனியன் தொழிலுக்குப் பெயர் பெற்றது; இந்த நகரத்தின் இடையில் நொய்யல் ஆறும் -- அதன் துணை நதியான ஜம்பை என்னும் சிற்றாறும் பாய்கின்றன.

வியாழன் இரவு திருப்பூர் நகரிலும் -- அதன் சுற்று வட்டாரங்களிலும் பலத்த மழை பெய்தது; இரவு 10-30 மணி முதல் அதிகாலை 3-மணி வரையில் சுமார் 4 அங்குலம் மழை பெய்தது; இதனால், நொய்யல் -- ஜம்பை ஆறுகளில் திடீரென்று வெள்ளம் பெருக்கெடுத்தது.

ஆற்றின் கரைகளில் பல இடங்களில் உடைப்புகள் ஏற்பட்டன; வெள்ளம் கரையை மீறி ஓடியது. திருப்பூர் நகரைச் சுற்றிலுமுள்ள கோல உமூர் ஏரி -- செங்குளம் ஏரி -- நல்லாத்துப்பாளையம் ஏரி -- சம்பந்தபாளையம் ஏரி -- கோம்பைக் காட்டு ஏரி ஆகிய 5 பெரிய ஏரிகளின் கரைகளும் உடைந்து விட்டன.

திருப்பூர் நகராட்சி அலுவலகத்திற்கு அருகில் ஜம்பை ஆற்றின்மீது 20 அடி உயரமுளள பாலம் உள்ளது. இது வெள்ளத்தில் மூழ்கிவிட்டது.

அப்பகுதியில் அமைந்துள்ள 5 பனியன் ஆலைகளுக்கு உள்ளேயும் வெள்ளம் புகுந்தது.

### 266 குடிசைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன

நொய்யல் ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுததில் அதன் இரு மருங்கிலும் உள்ள இராயபுரம் -- கள்ளம்பாளையம் சாலை--யூனிவர்சல் சாலை -- நாலு வீதி ஆகியவற்றில் வெள்ளம் புகுந்தது.

இப்பகுதிகளில் அமைந்திருந்த சுமார் 266 குடிசைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன; பெரும்பாலானவை சேதமடைந்தன.

ஆற்றில் வெள்ளம் திடீரெனப் பெருக்கெடுப்பதைக் கண்ட மக்கள், அருகிலுள்ள மரங்களிலும், பெரிய பாறைகளிலும் ஏறிக் கொண்டனர்; பலர் இரவெல்லாம் இப்படியே பயந்து பதுங்கி இருக்கவேண்டி நேரிட்டது.

### பல பகுதிகளிலும் வெள்ளம் புகுந்தது

திருப்பூர் நகரில் உள்ள 'வெண்ணிலா' என்னும் சூப்பர் மார்க்கெட்டிற்குள் ஜம்பை நதியின் வெள்ளம் புகுந்தது; அது இரண்டு மாடிக் கட்டடமாகும்; அதன் கீழ்த்தளம் முழுதும் 6 அடி உயரததுக்கு வெளளம் புகுந்தது; இதனால், ரூ. 4 இலட்சததுக்கும் அதிக மதிப்புள்ள பொருட்கள் சேதமடைந்ததாக மதிப்பிடப்படுகிறது.

பனியன் ஆலைகள் -- திரைப் படக் கொட்டகைகள் -- பள்ளிகள் ஆகியவற்றிலும வெள்ளம் புகுந்ததால், சேதங்கள் ஏற்பட்டிருப்பதாகத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

### 1,500 பேர் வீடிழந்தனர்

திருப்பூரில் வெள்ளத்தால் பல குடிசைகள் அடித்துச் செல்லப் பட்டதால், 1,500 பேர் வீடிழந்து தவித்தனர்; அவர்களுக்கு உரிய வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன.

### அமைச்சர் ஆறுதல்-- உதவித் தொகை வழங்கல்

அமைச்சர் மு. கண்ணப்பன் திருப்பூர் நகருக்கு வந்தார்; வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார்.

வீடிழந்த மக்களுக்கு எல்லாவித உதவிகளும் செய்து தரப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ரூ. 40 உதவித் தொகை வழங்கப்படுகிறது.

# கழக அரசின் சாதனைகளை மறைக்க முயற்சி

## மாற்றுருக்குத் திரைக் கயிறுகப் பயன்பட்டுவிட வேண்டாம்

### கழகக் கண்மணிகட்குக் கலைஞர் விடுக்கும் வேண்டுகோள்

சென்னை, செப். 30—

'திராவிட முன்னேற்றக் கழக அரசின் சாதனைகளை -- அடித்தளத்தில் உள்ள மக்களுக்காக அரசு ஆற்றுகின்ற அரும்பெரும் செயல்களை எடுத்துச் சொல்வம் மனத் தெளிவோ -- தூய்மையோ -- அரசியல் பெருந்தன்மையோ இல்லாமல், எப்படியாவது கழக ஆட்சிக்குத் தோல்வி கொடுக்க வேண்டும் -- மக்கள் மனத்தில் காசு கற்பிக்க வேண்டும் -- இவர்களை வீட்டிற்கு அனுப்ப வேண்டும்' என்ற ஆத்திரத்தில் சில பெருந்தலைவர்கள் பேசுகிறார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால், அவர்கள் ஆண்டு அனுபவித்தவர்கள்; இதே தமிழகத்தில் பல ஆண்டுகளாக முதலமைச்சராக -- அமைச்சர்களாக இருந்தவர்கள்; எனவே இன்று கழகத்தில் இருக்கின்ற சாதாரணமான எங்களைச் சாமானியமான நீங்கள் பாராட்டுகிற நேரத்தில் அவர்களால் அதனைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை; 'நாம்தான் ஆண்டு அனுபவித்துவிட்டோமே -- இனிமேல் அவர்களும் கொஞ்ச காலம் நாட்டை ஆண்டு பார்க்கட்டுமே -- நாம் செய்யாதவைகளை இவர்களாவது செய்து காட்டட்டுமே -- இவர்களிடம் வேலை வாங்குவோமே' என்ற பரந்த மனப்பான்மை இல்லாமல், இதுபோன்ற நிகழ்ச்சிகளை எரிச்சல் கண்கொண்டு ஆத்திரத்தைக் கக்குவார்கள்!

எனக்கிருக்கின்ற அச்சமெல்லாம் இதுபோன்ற உற்சாகமான விழாக்களை மாத்திரம் மாற்றுக் கட்சிக்காரர்கள் பிடித்துக்கொண்டு விமர்சனம் செய்து -- கழக அரசின் சாதனைகளை அவர்கள் கலபமாக மறைத்துவிடுகிறார்கள்!

இந்த அரசு -- தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் -- உண்மையான சுதந்தரத்தை மக்கள் அனுபவிக்க அண்ணா அவர்களால் உருவாக்கப் பட்ட அரசு; இந்த ஐந்தாறு ஆண்டுக் காலத்தில் நாங்கள் என்னென்ன காரியங்களைச் செய்திருக்கிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

சென்னையில் குடிசைப் பகுதிகளையெல்லாம் மாற்றி -- குமுறிக்கொண்டிருந்த ஏழைகட்குக் கோபுர வீடுகளைக் கட்டித் தருகின்ற காட்சிகளைப் பார்க்கிறீர்கள்; விவசாயத் தொழிலாளர்கள் இலட்சத்திற்கு மேற்பட்டவர்கட்குத் தஞ்சையில் குடியிருப்பு மனைகளைச் சொந்த மாக்கியதைப் போலவே, தமிழ்நாடு முழுமையும் சொந்தமாக்குவதற்கு அண்ணா பிறந்த நாளில் அறிவிக்கப்பட்டிருக்கிறது; பத்து இலட்சம் பேருக்குக் கண் ஒளி வழங்கும் திட்டத்தின் அடிப்படையில், இந்த ஆண்டில் ஓர் இலட்சம் பேருக்குக் கண்ணொளி தரப் படுகிறது.

இதெல்லாம் சாதாரணமான திட்டங்கள் அல்ல; சாதாரணமானவர்களுக்காக -- சாதாரணமான எங்களால் நிறைவேற்றப்படுகின்ற திட்டங்கள்; இந்தத் திட்டங்கள் -- இந்தச் சாதனைகள் இன்று மறைக்கப்படுகின்றன; இதை மறைக்க மாற்றுக் கட்சியினர் மார்தட்டிக் கொள்கிறார்கள் -- மேடைகளில் முழங்குகிறார்கள் -- ஏடுகளில் எழுதுகிறார்கள!

அந்த மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு நம்மவர்களில் யாரும் தங்களை அறியாமல் துணை போய்விடாமல் இருக்க வேண்டுமென்று அண்ணா பிறந்த நாள் விழாவில் -- அண்ணாவின் பெயரால் கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால், நம்முடைய சாதனைகளை மறைக்க சாமர்த்தியமாக மாற்றார் திரை போடுகிறார்கள்! அந்தத் திரைக்குப் பயன்படும் கயிறாகவோ, நூலாகவோ நம்மவர்கள் யாரும் இருந்திடல் ஆகாது!

இதைத்தான் இந்த மாபெரும் மக்கள் வெள்ளத்தில் அமர்ந்திருக்கிற கழக கண்மணிகளுக்கு -- உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சாதாரணமான தலைவன் என்ற முறையில் -- தெரிவித்துக் கொள்கிறேன்."

---கழகத் தலைவர் கலைஞர்

(பர்மா தமிழர் மறுமலர்ச்சி சங்கச் சார்பில் நடந்த அண்ணா பிறந்த நாள் விழாவில்)

## மதுவுக்குப் பதில் டிஞ்சரைக் குடித்தவர்கள்

### நைனிடாலில் 11 பேர் பலி

நைனிடால், செப். 30—

நைனிடால் மாவட்டத்தில் சாராயத்துக்குப் பதில் 'டிஞ்சர் ஜிஞ்சர்' குடித்த 11 பேர் மாண்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

## அறிவிப்பு

காந்தியார் பிறந்த நாளை முன்னிட்டு 2—10—72 அன்று நமது அலுவலகத்திற்கு விடுமுறை ஆகையால் 'நம் நாடு' அடுத்த இதழ் 3—10—72 அன்று சென்னையிலும் மறுநாள் வெளியூர்களிலும் கிடைக்கும்.

—பொறுப்பாளர்

## ஊழல் பேர்வழிகளுக்குச் சீட்டு

### பிலிப்பைன்சில் புதுமுறைக் களையெடுப்பு

மணிலா, செப். 30—

அரசு ஊழியர்களில் ஊழல் பேர்வழிகளையும் -- திறமையற்றவர்களையும் -- அவசியமற்றவர்களையும் நீக்கிவிடுவதற்காகப் பிலிப்பைன்ஸ் குடியரசுத் தலைவர் மார்க்கோஸ் ஒரு நூதன வழியைக் கையாள முன்வந்திருக்கிறார்.

எல்லா அரசு ஊழியர்களும் அக்டோபர் 15ந் தேதிக்குள் பதவி விலகல் கடிதத்தை அனுப்பி வைக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்.

மேலதிகாரிகளில்திறமைமிக்கவர்களை வைத்துக்கொண்டு மற்றவர்களைக் கட்டாயமாக 'ரிடையர்' ஆக்குவதற்கு வசதியாக இந்தப் பதவி விலகல் கடிதங்கள் கோரப்படுகின்றன.

நாடு முழுவதும் மொத்தம் 5 இலட்சம் அரசு ஊழியர்கள் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது.

பல நீதிபதிகள் -- உள்நாட்டு வரித் துறை அதிகாரிகள் -- சுங்க துறை அதிகாரிகள் உட்பட 450 அதிகாரிகளின் பதவி விலகலை ஏற்றுக்கொண்டோ அல்லது 'டிஸ்மிஸ்' செய்தோ இருப்பதாக குடியரசுத் தலைவர் அறிவித்தார்.

பிலிப்பைன்ஸில் இராணுவச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது; அதன்கீழ் அவர் இந்த தீவிர நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்.

நம்நாடு
ஆசிரியர்: இரா. செழியன்
திருவள்ளுவராண்டு 2003 புரட்டாசி 14 (30—9—72) சனி

# காலத்தின் சின்னம்—எழுச்சியின் அடையாளம்—மறுமலர்ச்சியின் உருவகம்!

## ஊமைகளாக இருந்த மக்களைப் பேச வைத்தார்-உரிமை முழக்கமிடச் செய்தார்-'படை பல வந்திடினும் தடை பல நேரிடினும் அஞ்சாதீர்' என்றுரைத்தார்

### அச்சம் அகல—அறநெறி தழைக்க அண்ணலின் பிறந்த நாளில் உறுதி பெற்றிடுவோம்!

### காந்தியடிகளின் சிறப்புமிக்க மாண்பு — பேரறிஞர் அண்ணா சூட்டிய புகழாரம்

மகாத்மா காந்தியடிகளின் 98 வது பிறந்த நாள் விழாவின்போது, அன்றைய தமிழக முதல்வரான பேரறிஞர் அண்ணா அவர்கள். (2—10—67-ல்) சென்னை வானொலி நிலையத்தில் ஆற்றிய உரையினை, இன்று காந்தி பிறந்த நாளை முன்னிட்டு வெளியிடுகிறோம்.

மகாத்மா காந்தியின் மாண்பு குறித்துத் தென்னாட்டுக் காந்தியான அண்ணா அவர்கள் வாயாலே சொல்லக் கேட்கும் வாய்ப்பினைப் பெறத் தவறியவர்கள், இதனைப் படிப்பதன்மூலம் மனநிறைவு கொள்ள முடியும் என்று நம்புகிறோம்.

காந்தியடிகள் ஒரு கட்சிக்கே சொந்தமானவர் என்ற நிலையை மாற்றி, 'அவர் எல்லாக் கட்சிகட்கும் உரியவர் — அவருடைய அறிவுரைகள் எல்லோருக்கும் பயன்படக்கூடியவை' என்பதை எடுத்துக்காட்டித் தமது உரையில் அண்ணா அவர்கள் அழகுநடையில் வழங்கிய உரை வருமாறு:—

"உலக உத்தமர் காந்தியடிகளின் பிறந்த நாள் நன்னாளாகக் கொண்டாடப்படுகிறது; அவரவர், தத்தமக்கு விருப்பமான முறையில் காந்தியடிகளுக்குத் தமது அன்பினைக் காணிக்கையாக்கி அளிக்கின்றனர்; அவருடைய திருவுருவப் படத்திற்கு மாலைகளிட்டும் — அவர் புகழ் பற்றிய பாடல்களை இசைத்தும் — பஜனை நடாத்தியும் — நூற்புத் தொண்டாற்றியும் — சேரிகளைத் திருத்தும் பணிபுரிந்தும் இந்நாளைக் கொண்டாடுகின்றனர்.

அவர் ஓர் தூயவர் — நமது மார்க்கத்தின் மாசு துடைத்திட வந்த மகான்' என்பாரும், 'அவர் ஓர் விடுதலை வீரர்; நமது நாட்டு அடிமைத் தளைகளை உடைத்தெறிந்த அஞ்சாநெஞ்சினர்' என்பாரும், 'அவர் ஓர் வேதாந்தி — பழைய தத்துவம் பலவற்றுக்கும் புதிய விளக்கமளித்தவர்' என்பாரும், 'அவர் ஒரு சமதர்மவாதி — ஏழை பங்காளர் — ஏழைகள் புதுவாழ்வு பெற வழிவகுத்தவர்' என்பாரும் 'அவர், கிராம இராஜ்யம் அமைத்திட முனைந்தவர்' என்பாரும், இதுபோல் அவரிடம் அவரவர் கண்டவற்றினைக் கொண்டு அளவிட்டு வியந்து பாராட்டுவோர் பல்வேறு வகையினர் உளர்.

இவர்களில் எவருடைய பார்வையில் — முழு காந்தி அடிகள் தெரிகிறார் என்பது — காலமெல்லாம் ஆராய்ந்தறிந்து கொள்ளவேண்டிய ஒரு பிரச்சினையாகும்; காரணம், ஒரு தனி மனிதர்' என்ற முறையிலே மட்டும் கவனிக்க வேண்டியவர் அல்லர் அவர்; 'காலத்தின் சின்னம் — எழுச்சியின் அடையாளம் — மறுமலர்ச்சியின் உருவகம்' அவர்!

அரசியல் கண்ணோட்டத்துடன் மட்டும் திருப்தியடைய விரும்பினால், அவருடைய அறப்போர் முறையினை மட்டும் வியந்து பாராட்டுவதுடன் இருந்துவிடத் தோன்றும்; ஆனால், அரசியல் துறையிலே மட்டும் அரும்பெரும் வெற்றிபெற்று — மற்றத் துறைகளிலே ஈடுபடாதிருந்தவர் அல்லர்; எல்லாத் துறைகளிலும் அவர் தமது முத்திரையைப் பொறித்துச் சென்றவர்; எல்லாத் துறையினரும், 'எமக்காகவே காந்தி அடிகள் வாழ்ந்தார் — எமக்காகவே பணிபுரிந்தார்' என்று சொந்தம் கொள்ளத்தக்க முறையிலே அவருடைய வாழ்க்கையும், தொண்டும் அமைந்திருந்தன!

அவருடைய பிறந்த நாள், எல்லாத் துறைகளிலே உள்ளவர்களாலும் கொண்டாடப்படுவதற்கான காரணம் இதுவே! அவர் ஒரு நாட்டின் காலம்! ஒரே ஒரு துறைக்கு அல்ல—எல்லாத் துறைகளுக்கும் ஒரு திருப்பத்தை—ஒரு புதிய பொலிவை—வலிவைக் கொடுத்தவர்!

ஒரு நாட்டின் முன்னேற்றம், ஏதோ ஒரு துறையிலே மட்டும் பெறப்படுகின்ற வெற்றியைப் பொறுத்தது அன்று; எல்லாத் துறைகளிலும் வெற்றி காணவேண்டும்; அவைகளின் ஒட்டு மொத்தத்தைக்கொண்டே, 'அந்நாடு முன்னேற்றம் அடைந்திருக்கிறதா' என்ற கணக்குப் பார்க்க வேண்டும்.

ஒரு நாட்டின் வரலாற்றிலே அவ்விதமான ஒரு கணக்கு அடிக்கடி கிடையாது; 'ஒரு நூற்றாண்டுக்கு ஒருமுறை கிடைக்கும்' என்றும் கூறிவிட முடியாது; அந்தக் கணக்கு, இந்நாட்டுக்குக் காந்தியடிகளின் வடிவத்திலே கிடைத்தது; எனவேதான், இந்நாள், ஒரு மாபெரும் தலைவரின் பிறந்த நாளாக மட்டுமன்றி — ஒரு நாட்டுக்குக் கிடைத்த 'நற்காலம்' என்ற முறையிலே சிறப்புப் பெறுகிறது!

இன்று, இராட்டை சுழலுகிறது — நாளை எத்தனைப் பேர்? இன்று, சேரிகளிலே சென்று சேவை செய்கிறோம் — நாளை? 'இன்று, வகுப்பு ஒற்றுமை பற்றி எழுச்சியுடன் பேசுகிறோம் — நாளை? இன்று, 'கிராமங்களிலேதான் நாட்டின் இதயம் இருக்கிறது' என்று உணர்ந்து பேசுகிறோம் — ஆனால், மறுநாள்?

இன்று நடத்திடும் திருநாளின் மாண்பு—நாளையும் மறுநாளும், பிற நாட்களிலும் நமது எண்ணத்திலும் செயலிலும் ஒளிவிட வேண்டும்; அதற்கே இந்நாள்! அவர் புகழ் பாடி மகிழ்ந்திட மட்டுமல்ல — அவர் வழி நடத்திடவும், அவர் காண விரும்பியதைக் கண்டிடவும், அவர் தந்து சென்றதை உருக்குலைக்காதிருந்திடவும், அவர் ஊட்டிய உணர்ச்சிகளை உயிருள்ளவையாக்கிடவும்தான்!

மாலையின் மாண்பு — மணத்தில்! விளக்கின் பயன் — ஒளியில்! விழாக்களின் பலன் — நமது செயலிலே இழைந்திடும் மாண்பிலே இருக்கிறது!

அவருடைய பிறந்த நாள், நாமெல்லாம் நற்கருத்தும் — சீரிய செயலும் பெற்றிடுவதற்கான வாய்ப்பாக அமைதல் வேண்டும்! 'அதற்கான முறையில் நாம் நடந்துகொள்கின்றோமா' என்ற கேள்வியை எழுப்புகிறேன் — நம்முன் உள்ள மிகப் பெரிய கேள்வி அது!

மகான்களையும், மாவீரர்களையும் கொண்டாடுவதிலே வல்லவர்கள் நாம்; அவர்கள் புரிந்த அற்புதங்களை—மகிமைகளை—காதைகளாய், கவிதைகளாய் ஆக்கி மகிழ்வதிலும் நாம் மிகவும் வல்லவர்கள்! 'அவர், கடலை அடக்கினார்—காற்றை விரட்டினார்—சருநாகத்தை மாலையாக அணிந்தார் — கந்த மூலமே அவருக்கு உணவு; தொட்டார் — பட்ட மரம் தளிர்த்தது; பார்த்தார் — பலடி தாயமானன்; குருடன் பாரவை பெற்றான்' — இப்படிப்பட்ட கதைகளைக் கேட்டுக் கேட்டுச் சொக்கிப் போகிறவர்கள் நிரம்பிய நாடு, நம் நாடு!

இந்த மகிமைகளையும் அற்புதங்களையும் வியந்து பேசுவது, பிறகு எதற்குப் பயன்படுகிறது? 'அவர் மகான் — ஆகவே அப்படிச் செய்தார்; நாம் சாமானியர்கள் - நம்மால் முடியுமா அவர் செய்ததைச் செய்ய' என்று பேசி, நமது செயலற்ற போக்குக்கு ஒரு சமாதானம் தேடிக்கொள்ளவே அது மெத்தவும் பயன்படுகிறது!

அந்த முறையிலே காந்தியடிகளின் பிறந்த நாளை நடத்துபவர்களாக நாம் இருந்துவிடக்கூடாது என்பதற்காகவே இதனைக் கூறுகிறேன்.

அவரை, 'அவதார புருஷர்களிலே ஒருவர் — பூஜைக்கு உரியவர்' என்று — அவர் பிறந்த நாளன்று அவர் பற்றிய மகிமையை — அற்புதத்தைப் பேசுவது மட்டுமே போதும் என்று இருந்திடாமல், அவர் காண விருப்பிய சமுதாயம் — அவர் எடுத்துக்காட்டிய இலட்சியம் — அவர் விளக்கிச் சென்ற தூய்மை ஆகியவற்றினை நினைவிலே கொண்டு, அதற்கான முறையிலே பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆகாயத் தாமரையைப் பறித்துக் கொடுத்திடும் அற்புதம் அவர் காட்டினாரில்லை; ஆனால், ஊமைகளாய் இருந்துவந்த மக்களைப் பேச வைத்தார் — உரிமை முழக்கமிடச் செய்தார் — 'படை பல வந்திடினும் — தடை பல நேரிடினும் அஞ்சாதீர்' என்றுரைத்தார்!

'அஞ்சி அஞ்சிச் சாவார்; அவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே' என்று துக்கம் தோய்ந்த குரலிலே பாடினாரே பாரதியார்—அந்த அச்சத்தைத் துடைத்தார்! ஆயுதம் தாங்கியவர் எதிரில் சாகப் பயப்படாதோரின் ஓர் அணி வகுப்பை நிறுத்திக் காட்டினார்! சிட்டுக் குருவிகளுக்கு வல்லூறை எதிர்த்திடும் ஆற்றல் ஏற்படச் செய்தார்! 'நம்மால் என்ன ஆகும்' என்ற ஏக்கத்தை விரட்டினார்! 'நாமிருக்கும் நாடு நமது என்பதறிவோம்' என்ற உறுதி எழச் செய்தார்! போர் முகாம் அமைத்து அல்ல—எளிய குடில் அமைத்து—வெட்டச் சொல்லி அல்ல—'வெட்டுண்டவர் போக ஏனையோர் அறப்போர்ப் பாதை நடத்திடுக' என்றுரைத்து — ஆத்திரம் ஊட்டி அல்ல — அன்பினை ஊட்டி!

'மகான்களிடம் அமைந்திருப்பதாகக் கூறப்படும் அற்புதங்களைக் கொண்டவர் அவர்' என்று கதை கூறுவர்—காந்தியடிகள் நடாத்திய அற்புதத்தைப் பற்றி! நாம் நமது கண்களால் கண்டோம்—அந்த 'அரை ஆடை' மனிதர், கோடானுகோடி மக்களுக்கு மானமுள்ள வாழ்வு பெற்றுத் தந்ததைவிட, 'அற்புதம்' வேறு என்ன இருக்க முடியும்?

'இவரா இந்தியாவின் தலைவர்?' என்று எள்ளி நகையாடியவர்கள், அந்த அற்புதம் நடைபெற்ற பிறகு, 'இவரன்றோ தலைவர்' என்று புகழ்ந்தனர்! 'இந்நாட்டுக்கு மட்டுமல்ல — அடிமைத் தளை உடைத்திட விரும்பும் எந்நாட்டுக்கும் அவர் காட்டிய அறப்போர் முறை பொருத்தமானது' என்று, இன்று ஆய்வாளர்கள் பலர் கூறுகின்றனர்!

'இந்தியா என்றொரு நாடுண்டு—அங்கு ஏலம், கிராம்பு பெறுவதுண்டு; பொன்னும் பொருளும் மிக உண்டு — போக்கறியாதார் நிரம்ப உண்டு' என்ற அளவில், பதினாறாம் நூற்றாண்டிலே உலகம் அறிந்திருந்தது!

பிறகு படிப்படியாக இந்தியா, பிரிட்டிஷ் பிடியிலே சிக்கிவிட்டது; அப்போது, 'இந்தியா என்றோர் நாடுண்டு — அது ஆங்கிலேயர்க்கு நல்ல வேட்டைக்காடு' என்று உலகம் இழித்தும் பழித்தும் பேசிக் கொண்டது!

விடிவெள்ளி தோன்றுவதுபோல், திலகர் காலத்திலே விடுதலைக்கு முயற்சி செய்யப்பட்டது என்றபோதிலும், காந்தியடிகள் காங்கிரசுக்குள் புகுந்த பிறகே, 'இந்தியா என்றோர் நாடுண்டு — அங்கு விழிப்பும் எழுச்சியும் மிக உண்டு' என்று உலகம் அறிந்து கொள்ள முடிந்தது!

காந்தியடிகளின் புகழொளி மூலமே உலகம், இந்தியாவைக் கண்டு வந்தது! தன்னலமற்ற—விளைவு பற்றிய கவலையற்ற போராட்ட மனோபாவத்தை, நாட்டிலே காந்தியடிகளால்தான் உண்டாக்க முடிந்தது! அதற்கு முன்பெல்லாம், விடுதலை கோரி மனுச் செய்யும் மேதாவிகளிடமே நாடு இருந்தது!

அவருடைய உருவமோ—உடலமைப்போ—பேச்சோ—நடவடிக்கையோ இராணுவ மனப்பான்மையை ஏற்படுத்தக்கூடிய விதமாக இல்லை; ஆனால் அவரால், இராணுவங்களையும் எதிர்த்து நிற்கக்கூடிய வீர உணர்ச்சியை இலட்சக்கணக்கானவர்களிடத்தில் உண்டாக்க முடிந்தது!

அவருடைய பொதுப் பணியிலே ஒரு கடுமையான சொல்—ஒரு நேர்மையற்ற செயல்—ஒரு சுயநலத் திட்டம் இருந்ததில்லை!

அவருடைய சேவையினால் ஏற்பட்ட செல்வாக்கு, இந்தியாவின் ஒளியையும் — ஆசியாவின் புகழையும் — நிறத்திமிர் கொண்டு இறுமாந்திருந்த ஐரோப்பிய வல்லரசுகளுக்கும் கிலி உண்டாக்கக் கூடிய அளவுக்குப் பரம்பிற்று!

அவருடைய மொழியைக் கேட்க வெளிநாட்டு அரசாங்கத் தலைவர்கள் ஓடோடி வந்தனர்! அவர் மண் குடிசையிலே தங்கினால், அது, 'மதிப்பளிக்கக்கூடியது' என்று மன்னர்கள் எண்ணினர்!

'சுயராஜ்யம்' பெற்றளித்துவிட்டால் போதும் என்று அவர் கருதவுமில்லை — கூறவுமில்லை! 'நாடும் மக்களும் எப்படி இருந்திட வேண்டும்' என்பதனை அவர் கூறாமலுமில்லை!

'சுயராஜ்யம் — ஓர் இலட்சியத்துக்கு வாய்ப்பு' என்றே அவர் கருதினார்! ஒரு நாட்டுக் காதையிலே பொன் ஏடு அது — ஆனால், கடைசி ஏடு அல்ல' என்பதை வலியுறுத்தினார்!

"நாடும் மக்களும் எந்த நிலை பெறவேண்டுமோ அதற்கு அடிமைத்தனம் தடையாக இருக்கிறது; ஆகவே, அதை எந்த விலை கொடுத்தேனும் அகற்றியாக வேண்டும்" என்றே அவர் கூறினார்!

அடிமைத் தளை அகற்றப்பட்டது; ஆனால், 'எந்த நிலையிலே நாடும் மக்களும் இருந்திட வேண்டும்' என்று அவர் கருதினாரோ அந்த நிலையை ஏற்படுத்திவிட்டோமா? 'இல்லை' என்பதைச் சொல்லக் கூச்சப்படத் தேவை இல்லை! 'ஏற்படுத்தியாக வேண்டும்' என்ற உறுதியைப் பெற்றிட, இந்நாள் உணர்ச்சி அளித்திட வேண்டும்!

அச்சம் அகற்றினார் — ஆங்கில அரசிடம் கொண்டிருந்த அச்சத்தை! ஆனால், அச்சம் பிற துறைகளிலே இருந்து அகன்றதா — இல்லையே! சமுதாயத்தில், 'மேலோர்—கீழோர், செல்வர்—வறியர், எளியோர்—வலியோர்' என இருக்குமட்டும் அச்சம் எங்ஙனம் அகலும்?

பசி அச்சுறுத்துகிறது — பற்றாக்குறை பயமூட்டுகிறது — குரோத உணர்ச்சி விரட்டுகிறது — அச்சம் அகலவில்லை!

அச்சம் அகல வேண்டும்—அறநெறி தழைக்கவேண்டும்—அண்ணலின் பிறந்த நாள் விழா நடாத்திடும்போது, இதற்கான உறுதி பெற்றிடவேண்டும்!

ஒருபுறம் செல்வம்—அதனைச் சூழ வறுமை! ஒருபுறம் பளபளப்பான பட்டினங்கள்—கோடியிலே வறுமை நெளியும் சேரிப்புறங்கள்! ஒருபுறம் தொழிற்கூடங்கள்—மற்றொருபுறம் வேலையில்லாதார் கூட்டம்! ஒருபுறம் அறநெறி நிலையங்கள்—பிறிதோர் புறம் சுரண்டல்காரர்கள் — சூதுமதியினர்—பதுக்கல்காரர்கள்—கள்ளச் சந்தையினர்!

இதைக் காண்பதற்கு அல்ல அவர் காலமெல்லாம் உழைத்தது—இந்தக் கேடுகளற்ற ஒரு தூய நாடு காணவே அவர் விரும்பினார்!

காந்தியடிகள், இந்தியாவை, மாண்புமிகு நாடு ஆக்கிட விரும்பினார்! குற்றமற்ற — சுரண்டலற்ற — வகுப்புப் பேதமற்ற நாடாக ஆக்க விரும்பினார்! அவர் பிறந்த நாளைக் கொண்டாடும் நாம் காணும் நாடு, இன்று எத்தகைய நிலையில் இருக்கிறது? — வகுப்புக் கலவரங்கள், தீண்டாமைக் கொடுமை, வலியோர் சிலர் எளியோர்தமை வதை புரியும் கொடுமை, கலாம் நெளியும் நகரங்கள், கவலை ததும்பும் கிராமங்கள், அரசியல் சூதுகள், சமுதாயச் சதிகள் ஆகிய எல்லாம் நெளிகின்றன — 'அடக்குவார் எவர் உளர்' என்று கொக்கரித்தாடி! சனநாயகம் நடக்கிறது — மொழி ஆதிக்கச் சண்டை ஓயவில்லை — 'காந்தியடிகள் மகான்; அற்புதம் நடத்தினார் — மறைந்தார்' என்ற முறையிலே எண்ணம் கொண்டிருக்கின்ற வரையில் இந்த நிலை மாறாது!

'காந்தியடிகள் மறையவில்லை; நம்முள் இருக்கிறார் — நம்முடன் கலந்துவிட்டார்' என்று எண்ணுதல் வேண்டும்; 'அவருடைய எண்ணங்கள் மறைந்திடவில்லை — அவைகளை நம்முடைய இலட்சியமாகக் கொண்டுள்ளோம்' என்ற உறுதி பிறந்திட வேண்டும்; மறைந்த காந்தியடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடுவதன் பொருள் இதுவாகவே இருக்கவேண்டும்!

'அவர் இறவாப் புகழ்பெற்றார்' என்பதனை எடுத்துரைக்கும் நாள் மட்டுமல்ல இது — 'அவருடைய எண்ணங்களை ஏற்றுக்கொண்டவர்கள் நாங்கள்; எனவே, அவர் காண விரும்பிய மாண்பு பிறந்திடப் பணிபுரிவோம்' என்ற உறுதி பெற!

அவருடைய நாட்களில், அவர் குரல் கேட்டு அந்நிய அரசு விரண்டோடிற்று; ஆனால், ஓட்டப்பட வேண்டியவை பல இருக்கின்றன—பொய்யும் பயமையும், கல்லாமையும் இல்லாமையும், சாதிப் பித்தமும், வகுப்பு மாச்சரியமும் வெருண்டோட வேண்டும்! அதற்குத் தேவைப்படும் தூய்மையும் வாய்மையும், அஞ்சாமையும், பணியாற்றும் தன்மையும் நம் ஒவ்வொருவருக்கும் இன்று பிறந்திட வேண்டும்! அதற்கே காந்தியடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம்!

"பரம ஏழைகளும், 'இது, நம்முடைய நாடு' என்று எண்ண வேண்டும்; 'அதன் அமைப்பில் நமக்கும் முக்கியத்துவமும் அதிகாரமும் இருக்கிறது' என்று நினைக்க வேண்டும்; மக்களில் உயர்ந்த சாதி என்பதே இருக்கக்கூடாது; எல்லாச் சமூகத்தினரும் அந்நியோந்நியமாய் வாழவேண்டும்; அத்தகைய இந்தியா உருவாகவே பாடுபடுவேன்"—'இதுவே உலக உத்தமர் காந்தியடிகளின் இலட்சியம்' என்று பண்டித ஜவகர்லால் நேரு கூறியதை நினைவுபடுத்துகிறேன்."

# சுப்பிரமணியத்தின் இந்தி பக்தி!

மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியத்துக்கு இப்போது திடீரென்று இந்தி பக்தி ஏற்பட்டிருக்கிறது! 'எல்லோரும் இந்தி படிக்கவேண்டும்' என்று இந்தி வழங்கும் வடநாட்டில் இருந்து கொண்டு பேசியிருக்கிறார்!

வடநாட்டு இந்திவாலாக்களிடம் நல்ல பெயர் எடுக்கவேண்டும் என்பதற்காக, மும்மொழித் திட்டத்தை ஆதரித்துப் பிரசாரம் செய்ய முனைந்த இவர், தமிழக அரசின் இரு மொழித் திட்டத்தையும் மறைமுகமாகக் கண்டித்திருக்கிறார்!

ரூர்க்கி என்ற இடத்தில் உள்ள தமிழ்ச் சங்கத்தார் திருவாளர் சுப்பிரமணியத்தை அழைத்திருக்கின்றனர்.

தமிழ்ச் சங்க விழாவில் கலந்துகொள்ளும் சுப்பிரமணியம், தமிழின் அருமை பெருமைகளை எடுத்து விளக்குவார் என்ற எண்ணத்துடனேயே அவர்கள் அவரை அழைத்திருக்கின்றனர்; ஆனால் அங்குபோய் — தமிழர்கள் நிறைந்த அந்தக் கூட்டத்தில் நின்றுகொண்டு, இந்திக்கு ஆதரவு தேடியிருக்கிறார்!

"மக்கள், மாநில — தேசிய — சர்வ தேசிய விவகாரங்களில் திறமைபெற மும்மொழித் திட்டம்தான் உதவும்" என்று அவர் கூறியிருக்கிறார்!

தாய்மொழியுடன் ஆங்கிலத்தை மட்டும் கற்றவர்கள் அந்தத் திறமையைப் பெறமுடியாது என்பது அவரது வாதம்!

இந்தியின் வாடையே அடிக்காத பலர் இன்று உலகம் புகழ் பெற்றுத் திகழ்வது — சுப்பிரமணியத்தின் கவனத்துக்கு வராத அளவுக்கு — 'புதிய இந்தி பக்தி' தடுத்துள்ளது போலும்!

இந்தியின் அரிச்சுவடியைக்கூடப் பார்த்தறியாத சுப்பிரமணியம், இன்று மத்திய தொழில் வளர்ச்சித்துறை அமைச்சராகவும் — இந்திய ஆளுங்கட்சியில் செல்வாக்குமிக்க தலைவர்களில் ஒருவராகவும் திகழ்வது, மும்மொழித் திட்டத்தினாலா?

தமிழ்நாட்டின் இரு மொழித் திட்டத்தைக் கண்டிக்கத் துணிந்த சுப்பிரமணியம், வடநாட்டு மாநிலங்களிலாவது மும்மொழித் திட்டம் முழு அளவுக்கு மனப்பூர்வமாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதை அறிந்ததாகத் தெரியவில்லை!

இந்தி மாநிலங்களில் உள்ளவர்கள், இந்தியையும் — ஆங்கிலத்தையும் மட்டுமே படிக்கின்றனர்; ஏதாவது ஒரு தென்னாட்டு மொழியைப் படிக்கவேண்டும் என்ற மும்மொழித் திட்ட இலட்சியத்தை அவர்கள் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை!

ஆனால், தமிழ்நாட்டு மாணவர்கள் மட்டும் தமிழ் — ஆங்கிலத்துடன் வடநாட்டு மொழியான இந்தியையும் கற்க வேண்டுமாம்!

தேவையற்ற இந்தியைத் தமிழகம் ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தமிழையும் — ஆங்கிலத்தையும் கற்பிப்பது தீங்கானதாம் — சொல்லுகிறார் சுப்பிரமணியம்!

திரு. சுப்பிரமணியம் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி, இந்தி மாநிலப் பள்ளிகளிலெல்லாம் தமிழ் கற்பிக்கப்பட வேண்டும் என்று கூறுவாரா? அதற்கு அவரிடம் துணிவு உண்டா? இந்திக்காரர்கள் மத்தியில் நின்றுகொண்டு அப்படிக் கூறிவிட்டுத் தப்பிவர அவரால் இயலுமா?

"நாட்டில் சில பகுதிகளில் (தமிழ்நாட்டில்) செய்யப்படுவது போல் இரு மொழிகளை மட்டும் கற்க ஏற்பாடு செய்வது, மற்ற மொழிகள் மீது துவேஷத்தை உண்டாக்குவது ஆகும்" என்றும் சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

'இந்தியைக் கற்கமாட்டோம்' என்று நாம் சொல்லுவது பிறமொழித் துவேஷம் என்றால், 'ஆங்கிலத்தை அறவே ஒழித்துக் கட்டவேண்டும்' என்று கூச்சலிடும் இந்திவாலாக்கள் பிறமொழித் துவேஷிகள் அல்லரா? தமிழையோ ஏதேனும் ஒரு தென்னக மொழியையோ கற்பிக்கவேண்டும் என்ற மும்மொழித் திட்டக் கொள்கையைச் செயல்படுத்த மறுக்கும் வடநாட்டுக்காரர்கள் பிறமொழித் துவேஷிகள் அல்லரா?

தமிழர்களுக்கு இதோபதேசம் புரியத் துணிந்திருக்கும் சி. சுப்பிரமணியம், முதலில் வடநாட்டு இந்தி வெறியர்களுக்கு இந்த உபதேசத்தைப் புரியட்டும்! அதைவிடுத்துத் தமிழ் மக்களைப் பார்த்து, 'பிற மொழித் துவேஷிகள்' என்றோ, 'மொழி வெறியர்கள்' என்றோ கூறுவதை அவர் நிறுத்திக்கொள்ள வேண்டும்; இல்லையேல், தமிழ் மக்கள் அவருக்குச் சரியான பாடம் கற்பிக்கத் தவறமாட்டார்கள் என்பதை எச்சரிக்கையாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'தமிழால் முடியும்' என்று புத்தகம் எழுதி வெளியிட்ட சுப்பிரமணியமா இப்படிப் பேசுகிறார் என்று சிலர் வினவக்கூடும்; ஆம் — இப்போது, 'தமிழால் முடியாது—இந்தியால்தான் முடியும்' என்கிறார்! சந்தர்ப்பவாதம் அவருடைய பிறவிக் குணம் — அதை யாரால் மாற்றமுடியும்?

1965 இந்தி எதிர்ப்பின்போது, இந்தித் திணிப்பை எதிர்த்துத் தமிழ் மக்களுக்கு ஆதரவாகப் பதவியிலிருந்து இராஜினாமா செய்ததெல்லாம் வெறும் 'ஸ்டண்ட்' என்பதை நம்ப மறுத்தவர்கள், இப்போதாவது நம்புவார்கள் என்று கருதுகிறோம்.

சுப்பிரமணியத்துக்கென்று தனியாக ஒரு கொள்கையோ — கோட்பாடோ கிடையாது; பதவியும் செல்வாக்கும்தான் அவரது இலட்சியம்; தாய்மொழி பற்றியோ — தமிழர்களின் தன்மான உணர்வு பற்றியோ அவர் எப்போதும் கவலைப்பட்டதில்லை; பதவி பறிபோகாமல் காப்பாற்றிக்கொள்ள அவர் எதையும் பேசுவார் — எப்படியும் நடந்துகொள்வார்!

ஆச்சாரியாரின் மும்மொழித் திட்டத்தைத் தூக்கிக் கொண்டு ஊர் ஊராகச் சென்று பிரசாரம் செய்த அதே சுப்பிரமணியம்தானே — பிறகு காமராசர் அமைச்சரவையில் இடம் பெற்று — மும்மொழித் திட்டத்தைப் புதைகுழிக்கு அனுப்பிவைத்தார்?

இவையெல்லாம், சுப்பிரமணியத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள நமக்கு நன்கு உதவுகின்றன; எனவே, அவரது பேச்சை நாம் சிறிதும் பொருட்படுத்தத் தேவையில்லை! அவர் இன்று இருக்கும் இடம் அவரை இப்படி ஆட்டிவைக்கிறது! அவருக்குப் பாடம் புகட்ட வேண்டியது தாய்மொழிப் பற்றும் — தன்மான உணர்வும்கொண்ட தமிழ்க் குடிமக்களின் தலையாய கடமையாகும்!

## கிராமங்களுக்குக் குடிநீர் வசதி

புதுடில்லி, செப். 30—

ஆந்திரப் பிரதேசம் — குசராத் — மத்தியப் பிரதேசம் — மகாராட்டிரம் — மைசூர் — இராஜஸ்தான் — தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்குக் குடிநீர் வசதி அளிப்பதற்காக சுமார் 5,000 குழாய்க் கிணறுகள் துரப்பணம் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தக் கிராமங்களில் கையினால் இயக்கக்கூடிய 1,500 பம்புகளும் — மின்விசையால் இயங்கும் 20 பம்புகளும் நிறுவப்பட்டிருக்கின்றன.

இந்த ஏற்பாடுகளினால் கிட்டத்தட்ட 15 இலட்சம் மக்கள் பயன் பெறுவார்கள்.

நான்காவது திட்ட காலத்தில் மத்திய அரசின் இந்தத் திட்டத்தின்படி, கையினால் இயக்கக்கூடிய பம்புகளை அமைப்பதற்காக 12,000 குழாய்க் கிணறுகளும் — மின்விசையால் இயங்கும் பம்புகளை அமைப்பதற்காக 200 குழாய்க் கிணறுகளும் துரப்பணம் செய்யப்படவிருக்கின்றன.

பதினோராயிரம் கிராமங்களிலுள்ள சுமார் 1.18 கோடி மக்கள் இத் திட்டங்களின் மூலம் பயனடைவார்கள்.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, 'யூனிசெப்' நிறுவனம் சுமார் ரூ. 5.70 கோடி மதிப்புள்ள 100 கடினப்பாறை துரப்பணக் கருவிகளையும் — பிற சாதனங்களையும் கொடுத்துதவ இசைந்திருக்கிறது.

இவற்றுள் 45 துரப்பணக் கருவிகள் ஏற்கெனவே சில மாநிலங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் 'யூனிசெப்' அளித்த துரப்பணக் கருவிகள் தற்போது பயன்படுத்தப்படுகின்றன.

## 25 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு

### சிறு தொழில்கள் மூலம் கிடைக்க நிபந்தனை

சென்னை, செப். 30—

"இந்திய அரசின் மரபுகளால் வீண் சிரமங்களுக்கும் — காலதாமதத்துக்கும் உள்ளாக்கும் 'சிவப்பு நாடா' முறையிலிருந்து சிறு தொழில் துறைக்கு விடுதலை கிடைத்தால், அது புதிதாக 25 இலட்சம் பேருக்கு உடனடியாக வேலை வாய்ப்புத் தரமுடியும்"

என்று, இந்திய சிறு தொழில் சங்கங்கள் கூட்டமைப்புத் தலைவர் எம். எஸ். பார்த்தசாரதி இங்கு கூறினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இப்போதுள்ள அதிகார ரீதியான மரபுகள் சிறு தொழில்கள் தாங்க முடியாத பளுவாகும்; அதனால் சிறு தொழில்கள் துரிதமாக முன்னேற முடியவில்லை.

புதிய தொழில்களைத் தொடங்குவது — கச்சாப் பொருள்கள் லைசென்சுகள் வழங்குவது கடன் வசதிகள் போன்ற பிரச்சினைகள் தொடர்பாக நடைமுறைகளினால் ஏற்படும் தாமதங்கள் சிறிய தொழில் துறையை விரிவுபடுத்துவதற்கு இடையூறாக இருக்கின்றன; இந்த நடைமுறை சிரமங்களை நீக்கினால் சிறிய தொழில் துறை பெரும் அளவில் வளர்ச்சியடையும்."

## உழைக்கப் புறப்படுவீர் — எத்தகைய தொழிலிலும் வேற்றுமை ஏதுமில்லை என்பதனை உணர்ந்து செயலாற்றத் தொடங்குவீர் — ஒழுங்கமைந்த தீமைகள் மனித இனத்தையே விழுங்கிவிடும் என்பதனை உணருவீர்

# காந்திக்கு நாம் செலுத்தும் அஞ்சலி

உழைப்பின் உயர்வு—வாய்மையின் வன்மை—இவைகளே காந்தியாரின் தியாக வாழ்வு தந்த பாடங்கள்!

தன்மான உணர்வு—தளரா நம்பிக்கை—இவைகளை மக்களுக்கு வலியுறுத்தியவர் காந்தியடிகள்

"எளிய வாழ்க்கை, சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள ஏற்ற தாழ்வுகளைச் செம்மைப்படுத்தி மிக்க பயன்படும்" என்று செயலாற்றிக் காட்டிய பெரியவர்!

"ஆண்டவன் பெயரால் ஏற்பட்ட சாதி — மத பேதங்களைத் தவிர்த்து ஒன்றுபட்டு உழைத்து, ஒவ்வொருவரும் உரிமையை உணர்ந்து — பெற்று — போற்றி — கடமையறிந்து — கண்ணியம் கடைபிடித்து — கட்டுப்பாட்டுடன் வாழ்தல் முறை" என்று வலியுறுத்தி வாழ்ந்து காட்டியவர் காந்தியடிகள்!

இந்திய மக்கள் உரிமைப் போராட்டத்தில், திருவள்ளுவரின் பொன்மொழியான,

"வினைவலியும், தன் வலியும் மாற்றான் வலியும்
துணை வலியும் தூக்கிச் செயல்"

என்பதனை உணர்ந்து ஏற்று — அறப்போர் முறையை வகுத்து—வெற்றியும் கண்டவர்!

அன்னார் பிறந்த நாள் விழாவன்று இவைகளை எல்லாம் சிந்தித்துச் செயலாற்றி — 'மக்கள் சமுதாயம் வளம்பெற்று வாழ என்ன செய்திடல் வேண்டும்' என்று எண்ணி — அதனை உறுதி கொள்வோமாக!

இயற்கை வளங்களும் — மனித சக்தியும் மிகப் பெரும் அளவில் மலிந்து கிடக்கின்றன நமது நாட்டில்; ஆனால், 'இப்பெரும் செல்வக் குவியல் நமக்கருகிலிருந்தும், அதன் பயனை முழுதும் பெறாதவர்களாய் வாழ்கின்றோம்' என்று எண்ணும்போது, வியப்பும் வேதனையுமே மிஞ்சுகின்றன! வளங்களை மக்களிலும் பயன்படுத்திக்கொள்ள மிகத் தேவை — உழைப்புத்தான்!

உழைப்பின் சிறப்பையும் — பெருமையையும் வாழ்நாளெல்லாம் நமக்கு அறிவுறுத்திவந்த உத்தமப் பெரியாரின் பிறந்த நாளினைக் கொண்டாடும் நாம், 'எத்தகைய தொழிலிலும் வேற்றுமை ஏதுமில்லை' என்பதைத் தெரிந்து, நமது பங்கினைச் செம்மையாகச் செய்யத் துவங்கவேண்டும்.

அவரது நினைவிற்கென இவ்வாண்டு அவரது 98-வது பிறந்த நாளினை, உற்பத்திப் பெருக்க விழாவாகக் கொண்டாட முடிவு மேற்கொண்டுள்ளோம்.

உற்பத்திப் பெருக்கத்தில் பங்குகொள்ள அனைவரும், வேற்றுமைகளையும் — பேதங்களையும் — உயர்வு தாழ்வினையும் உதறித் தள்ளிவிட்டு உழைக்கப் புறப்படவேண்டும்.

எத்தகைய உழைப்பிலும் கேவலமோ — தாழ்வோ இல்லையென உணர்ந்து, உழைக்கத் தொடங்க வேண்டும்.

(4-ம் பக்கம் பார்க்க)

# தமிழகத்தில் வறட்சி -- டில்லியிடம் ரூ. 6 கோடி நிதியுதவி கோரப்படும்

## மழையின்மையால் எல்லா மாவட்டங்களிலும் சங்கடத்தின் சாயல்கள்

### நிவாரணப் பணிகளுக்கு ரூ. 1 கோடி ஒதுக்கிச் செலவிடத் திட்டம்

### கலெக்டர்கள் மாநாட்டின் முடிவுகள் -- செய்தியாளர்களிடம் முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

சென்னை, செப். 30—

தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசிடமிருந்து முதல் கட்டமாக ரூ. 6 கோடி நிதியுதவி கோரப்படும்.

மத்திய உதவியை எதிர்பார்த்து, வறட்சி நிவாரணப் பணிகளுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட ரூ. 25 இலட்சத்தைத் தவிர மேலும் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கிச் செலவிடத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

**தமிழ்நாடு அரசு மத்திய அரசிடம் முதல் கட்டமாகக் கோரும் ரூ. 6 கோடி நிதியுதவி, கடனாகவோ அல்லது மானியமாகவோ கோரப்படும்; வறட்சி நிவாரணத்திற்காக வழக்கமாக மத்திய உதவி சில இனங்களுக்குக் கடனாகவும் -- சில இனங்களுக்கு மானியமாகவும் பெறப்படும்; அந்த அடிப்படையிலேயே இப்போதும் தமிழக வறட்சி நிவாரணப் பணிகளுக்கு மத்திய நிதியுதவி கோரப்படும்.**

மேற்கண்ட தகவல்களை நேற்று கோட்டையில் நடைபெற்ற மாவட்டக் கலெக்டர்கள் மாநாட்டு முடிவில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார்.

தமிழகத்தில் பருவ மழை தவறியதால், தோன்றியுள்ள வறட்சி நிலை குறித்து ஆராய மாவட்டக் கலெக்டர்கள் மாநாடு நடைபெற்றது.

முதலமைச்சர் -- ஏனைய அமைச்சர்கள் -- அரசுத் தலைமைச் செயலாளர் -- வருவாய் வாரிய உறுப்பினர்கள், பல்வேறு துறைகளின் செயலாளர்கள் -- மாவட்டக் கலெக்டர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்; சுமார் மூன்றரை மணி நேர விவாதம் நடைபெற்றது.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளைச் செய்தியாளரிடம் விளக்கி முதலமைச்சர் கூறியதாவது:—

1. அரசாங்கக் கடன்கள் ஒத்தி வைப்பு:— ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள மழை குன்றிய பகுதிகளுடன் மேலும் இன்றைய கூட்டத்தில் மாவட்டக் கலெக்டர்கள் குறிப்பிட்டுள்ள பகுதிகளிலும் இந்த ஆண்டு டிசம்பர் 31-ந்தேதி வரையில் அரசாங்கக் கடன்கள் -- நில வரி -- விவசாய வருமான வரி ஆகியவை வசூலிப்பது ஒத்திவைக்கப்படும்.
2. கூட்டுறவுக் கடன்:— மேலே குறிப்பிடப்பட்டுள்ள அதே பகுதிகளில் கூட்டுறவுக் குறுகிய காலக் கடன்களை நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றியமைக்க ரிசர்வ் பாங்கியுடன் கடிதப் போக்குவரத்தும் -- பேச்சு வார்த்தையும் நடைபெறுகிறது. விரைவில் ரிசர்வ் பாங்கியிடமிருந்து ஒப்புதல் பெற்று மேற்கண்ட முடிவு செயல்படுத்தப்படும்.
3. பகுதிகள்:— நிவாரணத்திற்காக எந்தெந்தப் பகுதிகள் என்று அரசு முடிவு எடுத்துள்ளதை, மாவட்டங்களில் அந்தந்த மாவட்டக் கலெக்டர்கள் அறிவிப்பார்கள்.
4. நிவாரணப் பணிகள் -- மத்திய அரசிடம் உதவி கோருதல்:—

(அ) குழாய்க் கிணறுகள் உள்பட குடிநீர்க் கிணறுகள் ஊருணிகள் அமைக்கவும், ஆழப்படுத்தவும் செய்தல்.

(ஆ) சிறு பாசனத் திட்டங்களின் பராமரிப்பை விரிவுபடுத்துதல்.

(இ) புதிய குளங்கள் அமைத்தல்.

(ஈ) வேலைவாய்ப்புக்கான சாலைகள் அமைத்தல் போன்ற கிராமப்புறத் திட்டங்கள் ஆகியவைகளுக்கு மத்திய அரசிடம் முதல் கட்டமாக ரூ. 6 கோடி கேட்பது என்றும், அந்த உதவியை எதிர்பார்த்து உடனடியாக ஏற்கனவே செலவிடப்பட்டுள்ள ரூ. 25 இலட்சத்திற்கும் மேலாக ரூ. 1-கோடி மாநில அரசு செலவிட முன்வருகிறது.

#### மத்திய அரசுக்குக் கடிதங்கள்

"தலைமையமைச்சர் -- மத்திய திட்ட அமைச்சர் தார் -- நிதியமைச்சர் சவான் ஆகியோருக்கு இது பற்றிக் கடிதங்கள் எழுதப்படும்" என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

செய்தியாளர்:— "தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்தில் அதிக வறட்சி நிலை உள்ளது."

முதலமைச்சர்:— "பருவ மழை தவறியதன் காரணத்தால், வறட்சியின் வாடை வீசியுள்ள பகுதிகளை மாவட்டக் கலெக்டர்கள் சுட்டிக் காட்டினர்; ஆந்திரம் -- ஒரிசா மட்டுமன்றித் தமிழ்நாட்டிலும் சில பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதைத் தலைமையமைச்சர் ஏற்கனவே அறிவித்துள்ளார்.

"மாவட்டங்களில் சில பகுதிகளில் மழையின்மை காரணமாகப் பயிரிடுவதில் தாமதமாகி உள்ளது.

"மேட்டூரில் தண்ணீர் குறைவானதால தஞ்சை போன்ற இடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

"எல்லா மாவட்டங்களிலும் மழை இல்லாமையால் ஏற்பட்ட சங்கடத்தின் சாயல்கள் இருக்கின்றன.

"ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தப் பகுதி மிகுதியாக வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை அந்தந்த மாவட்டக் கலெக்டர்கள் அறிவிப்பார்கள்."

பருவ மழை தவறியதன் காரணமாக மேட்டூர் நீர்த் தேக்கத்தில் நீர் மட்டம் கவலை தரத்தக்க அளவுக்குக் குறைந்துள்ளது; அத்துடன் மாநிலத்தின் சில பகுதிகளில் பருவமழை தவறியதன் காரணமாக மோசமான வறட்சி நிலை நிலவுவதாக அதிகாரிகள் வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஆந்திரம், ஒரிசா அளவுக்கு இங்கு அவ்வளவு கடுமையான வறட்சி ஏற்படவில்லை என்றாலும், தமிழக வறட்சி நிலைமையை -- விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை என்று அந்த வட்டாரம் தெரிவித்தது.

#### முதல்வர் டில்லி செல்லவில்லை

"டில்லியில் நாளை (ஞாயிறு) நடைபெறவிருக்கும் மாநில முதலமைச்சர்கள் -- உணவு அமைச்சர்கள் மகாநாட்டில் கலந்துகொள்ள நான் டில்லி செல்லவில்லை; உணவு அமைச்சர் மன்னை நாராயணசாமி -- வருவாய்த் துறை அமைச்சர் ப. உ. சண்முகம் மட்டுமே செல்கின்றனர்" என்று கலைஞர் தெரிவித்தார்.

## உணவுத் துறையில் தமிழகம் தன்னிறைவு

### மேலும் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை

திருச்சி, செப். 29—

"உணவுத் தானிய உற்பத்தியில் தமிழ்நாடு தன்னிறைவு அமைந்து விட்டது; மேற்கொண்டும் வேளாண்மையை அதிகரிக்க விவசாயிகளுக்கு அரசாங்கம் எல்லாவிதமான ஊக்கம் -- உதவிகளையும் அளிக்கும்"

என்று, வேளாண்மைத்துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் தெரிவித்தார்.

அரியலூரிலுள்ள அரசினர் மருத்துமனையின் புதிய பிரிவுக்கு அமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

விழாவிற்கு கோ. சிவப்பெருமாள் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

விவசாயப் பெருமக்கள் -- நகர்ப்புறத்து மாந்தர் -- மகளிர் -- மாணவர்கள் -- தொழிலாளர்கள் -- மற்றெல்லோரும் இப்பணியில் தங்களை அர்ப்பணித்துக்கொண்டு, 'உழைக்கும் புறப்படுவீர்' எனப் பணிவன்போடு கேட்டுக்கொளகிறேன்.

நமது நாட்டின் தந்தையாக -- வழி காட்டும் தோன்றலாக காந்தியடிகளை உளமார ஏற்று, அவர்தம் புகழையும் -- சிறப்புக்களையும் நாடெங்கும் பரப்புவது நமது தலையாய கடன்! வீடு தோறும் அவர்தம் சிறப்புக்கள், ஒலித்துக் கொண்டிருத்தல் வேண்டும்! ஒவ்வொரு குழந்தையுங்கூட, 'நாம், காந்தி நாட்டுக் குழந்தை' என்பதைப் புரிந்துகொண்டு புன்னகை செய்தல் வேண்டும்!

அவரது நினைவு நம் இதயங்களில் நீங்காத உயிரோவியமாய் நிலவிடல் வேண்டும்! அவர், கனவாய் -- வாழ்வாய்க் கொண்டிருந்த தீண்டாமை -- சாதி -- மதபேத ஒழிப்பும் போன்றவைகளை நமது வாழ்வின் குறிக்கோளாய் கொண்டு சிறத்தல் வேண்டும்.

சட்டங்கள் மூலமாக மட்டும் இவற்றைச் சமுதாயத்திலிருந்து நீக்கிவிட இயலாது! நம்முடைய இதயக் கதவுகளை நாமே திறந்து பார்க்கும்போதுதான், இச்சமூகக் கேடுகளைக் கல்லி எறிந்திட முடியும்!

அவற்றின் ஒழுங்கமைந்த தீமைகள் எவ்வாறு மனித இனத்தையே விழுங்கிவிடும் என்பதை உணரும்போதுதான், அவைகளை அகற்றிட முடியும்!

நம்முள்ளே அவரை இருத்தி -- அவர்தம் கொள்கை வழி அனைவரையும் நடக்கச் செய்தலே காந்திக்கு நாம் செலுத்தும் பெரும் அஞ்சலி!

காந்தியடிகளின் நூற்றாண்டு விழா, 'மாநிலக் குழுவின் தலைவன்' என்ற முறையில் இக்கருத்துகளைத் தமிழக மக்களுடன் பகிர்ந்து கொள்ளுவதில் உவகை கொள்ளுகிறேன்; அவர்தம் கனவினை நனவாக்கத் தமிழக மக்களுடன் உழைப்பது பெரும் வாய்ப்பெனவும் கருதுகிறேன்; அவர்தம் நினைவினைப் பட்டி தொட்டிகள் எல்லாம் பரப்ப அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென விழைகிறேன்.

இப்பணியில் எவரும் -- எக்கட்சியைச் சார்ந்தவர்களாயினும் -- எப்பிரிவினராயினும் -- எந்நிலையில் உழைப்பாளர்களாயினும் (அரசாங்க ஊழியர்கள் உட்பட) ஈடுபட வேண்டுமெனப் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்."

— காந்தியார் பிறந்த நாளையொட்டி பேரறிஞர் அண்ணா அவர்கள் 30—9—67-ல் வெளியிட்ட சிறப்புச் செய்தி




## காந்தியடிகள் பிறந்த நாள் விழா

### முதலமைச்சர் கலைஞர் தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் பங்கேற்பு

சென்னை, செப். 30—

காந்தியடிகளின் 102-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு 2-10-72 அன்று சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில், முதலமைச்சர் கலைஞர் தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் பொதுக்கூட்டமும் -- இந்திய விடுதலை வீரர்கட்கு செப்புப் பட்டயம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெறவிருக்கின்றன.

அன்று மாலை 5-30 மணிமுதல் 6-45 வரையில் மெல்லிசை மன்னர் எம். எஸ். விசுவநாதன் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெறும்; டி. எம். சௌந்தரராசன் -- எல். ஆர். ஈசுவரி -- செல்வி இராதா -- கே. வீரமணி ஆகியோர் பாடுகின்றனர்.

மாலை 6-45 மணிக்கு வ.உ. சிதம்பரனார் சிறையில் இழுத்த செக்கினை முதல்வர் கலைஞர் பொதுமக்கள் பார்வைக்குத் திறந்துவைக்கிறார்.

அடுத்து, விடுதலை வீரர்களுக்குச் செப்புப் பட்டயங்களை வழங்குவார்.

பின்னர் கலைஞர் தலைமையில் பொதுக்கூட்டம் துவங்கும்; கே. இராசாராம் நாயுடு, எஸ். ஜெயராம ரெட்டியார், சா. கணேசன், ஏ. ஆர். பெருமாள், கே. டி கே. தங்கமணி, கே. எஸ். அப்துல் வகாப்; ம. பொ. சிவஞானம், எஸ். எஸ். இராமசாமி படையாச்சி, குன்றக்குடி அடிகளார், ஏ. ஆர். தாமோதரன் ஆகியோர் பேசுவர்.

இரவு 9-மணிமுதல் 10-மணி வரை இசைமணி சீர்காழி கோவிந்தராசன் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.

### நடக்க இருப்பவை

## அண்ணா பிறந்த நாள் விழா பொதுக்கூட்டங்கள்

### 1--10--72

**சென்னை 70-வது வட்டம்**

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு மீர்சாகிப்பேட்டை சைவ முத்தையா முதலி தெருவில்; தலைவர்: க. பார்த்தசாரதி எம்.சி.; பேசுவோர்: கி. மனோகரன் எம்.பி., முரசொலி மாறன் எம்.பி., கோவை செழியன் எம்.எல்.ஏ., கே. ஏ. கிருஷ்ணசாமி எம்.பி., மு. அரங்கநாதன் எம்.சி., ஏ. ஜார்ஜ் என். சுப்பிரமணி மற்றும் பலர்.

### வன விலங்குகள் வார விழா

வன விலங்குகள் வார விழாவை 1—10—72 மாலை 6-30 மணிக்கு கிண்டி குழந்தைப் பூங்காவில் ஆளுநர் திரு. கே.கே. ஷா துவக்கி வைப்பார்; மின்சார அமைச்சர் திரு. ஓ. பி. இராமன் அவர்கள் கலந்துகொண்டு வன விலங்கு வாரம் பற்றிய முதலமைச்சரின் செய்தியை வெளியிடுவார்.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

### என். வி. நடராசன் நிகழ்ச்சிகள்

அக். 1 காலை 9 மணி; பண்ருட்டி — குடியிருப்புக் கிராமம் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுதல். மாலை 4 மணி; விழுப்புரம்— தொழிற்சாலை திறப்பு விழா. இரவு 7-மணி: விழுப்புரம் பொது மக்கள் வரவேற்பு.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலை ஏற்படுத்த மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த நிலையத்துக்கான செலவினங்களில் 50 சதவிகிதத்தை மத்திய அரசு கொடுத்து உதவும்; இவ்வுதவி ரூ. 60,000-த்துக்கு மேற்படாமல் இருக்கும்.

இவ்விதப் பயிற்சி நிலையங்களைத் துவக்க மாநில அரசோ, பதிவு செய்யப்பட்ட தகுதியுள்ள பொதுத் தொண்டு நிறுவனங்களோ இதற்கான திட்டங்களை அனுப்பிவைக்கலாம்.

## சி. பி. சிற்றரசு உடல் நிலை

சென்னை, செப். 30—

உடல் நலம் பாதிக்கப்பட்டுச் சென்னைப் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள மேலவைத் தலைவர் திரு. சி. பி. அவர்களின் உடல்நலம் நன்கு தேறி வருகிறது.

அவரை, அமைச்சர்கள் நாவலர் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், சட்டப் பேரவைத் தலைவர் கே.ஏ. மதியழகன், மேலவைத் துணைத் தலைவர் ம. பொ. சிவஞானம், சட்டமன்ற -- நாடாளுமன்ற உறுப்பினர்கள், திருமதி தயாளு கருணாநிதி ஆகியோர் சென்று பார்த்து உடல்நலம் விசாரித்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு ... விட்டு வெளியிடப்படுகிறது.